## வர்த்தகமும் சுற்றுலாவும்

முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு வர்த்தகத்துறையின் அபி விருத்திகள் 1987 இல் சாதகமாக அமைந்திருந்தன. ஏற்றுமதிகளின் பெறுமதி 1986 இன் 21 சதவீத வீழ்ச்சிக்கு மாருக சிஎஉ நியதிகளில் 4 சதவீதத்திஞல் உயர்வடைந்தது. மறுபக்கத்தில் இறக்குமதிகளின் மீதான செலவு 1986 இனைவிட 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக வர்த்தகக் கணக்குக் குறை முந்திய ஆண்டின் குறையுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 18 சதவீதத்திஞல் வீழ்ச்சியடைந்தது. இது வர்த்தகக்குறை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த இரண்டாவது ஆண்டாகும்.

ஏற்றுமதித்துறையின் வளர்ச்சி பெரும்பாலும் ஆடைகள், இரத்தினக்கற்கள் என்பவற்றிலிருந்தான உயர்வான வருவாய்களிஞல் ஏற்பட்டதாகும். வேளாண் மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வரவுகளும் ரூபா நியதி களில் 11 சதவீதத்திஞல் அதிகரித்தன. ஆஞல் சிஎஉ நியதிகளில் 5 சதவீதத்திஞல் இவை வீழ்ச்சியுற்றன. உண்மை நியதிகளில் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முற்ருகத் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட் களின் விலைகள் 1987 இல் உண்மை நியதிகளில் அதிகரித்தமையிஞல் அவற்றின் ஏற்றுமதி அளவு குறைவடைந்தமை காரணமாக ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.28

### வர்த்தகநிலுவை 1985—1987

பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள் (ஆ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது |
| 1985 ... | 49,069 (1,776) | 54,049 (1,956) | 35,035 (1,268) | 36,207 (1,311) | — 14,034 (—508) | —17,843 (—646) |
| 1986 ... | 51,282 (1,559) | 54,559 (1,658) | 34,092 (1,036) | 34,072 (1,036) | — 17,189 (—523) | —20,487 (—623) |
| 1987 (இ) ... | 59,750 (1,568) | 60,517 (1,588) | 39,861 (1,046) | 41,133 (1,080) | — 19,889 (—522) | —19,384 (—509) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.
(ஆ) மீள் ஏற்றுமதிகளை உள்ளடக்குகிறது.
(இ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்
ஏனைய முக்கிய வளமாக்கி இறக்குமதி யாளர்களும்,
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா,
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

தற்காலிக சுங்கத் தரவுகளின்படி ரூ. 597,500 இலட்சம் (சிஎஉ 15,680 இலட்சம்) கொண்ட இறக்குமதிச் செலவும் ரூ. 398,610 இலட்சம் கொண்ட (சிஎஉ 10,460 இலட்சம்) ஏற்றுமதி வரவுகளும் 1987 இல் ரூ. 198,890 இலட்சம் (சிஎஉ 5,220 இலட்சம்) கொண்ட வர்த்தகக் குறையினை ஏற்படுத்தின. இது முந்திய ஆண்டின் ரூ. 171,890 இலட்சம் கொண்ட குறையுடன் (சிஎஉ 5,230 இலட்சம்) ஒப்பிடத்தக்கது. பதிவு செய்தலில் ஏற்படும் பின்னடைவு, ஏனைய காரணிகள் என்பவற்றுக்கேற்பச் சுங்கத் தரவுகள் சீராக்கம் செய்யப்படுமிடத்து மொத்த இறக்குமதிகள் ரூ. 605,170 இலட்சமாக (சிஎஉ 15,880 இலட்சம்) மதிப்பிடப்பட்ட வேளையில் ஏற்றுமதிகள் ரூ. 411,330 இலட்சமாக (சிஎஉ 10,800 இலட்சம்) விளங்கின. இதன் விளைவாகச் சீராக்கப்பட்ட தரவு 1986 இன் ரூ. 204,870 இலட்சம் (சிஎஉ 6,230 இலட்சம்) கொண்ட குறையுடன் ஒப்பிடுகையில் ரூ. 193,840 இலட்சம் கொண்ட (சிஎஉ 5,090 இலட்சம்) வீழ்ச்சியை ஏற்படுத்தி சிஎஉ நியதிகளில் 18 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

ஏற்றுமதிகளின் சராசரி விலைகள் முந்திய ஆண்டில் பெறப்பட்டவையுடன் ஒப்பிடுகையில் 1987 இல் சாதகமாக அமைந்தன. எனினும் உயர்ந்த ஏற்றுமதி விலைகளின் சாதகமான தாக்கம் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் மிகக் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டதன் மூலம் வர்த்தக மாற்று விகிதத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. வர்த்தகக் குறிகாட்டிகளினால் அளவிடப்பட்டவாறு சராசரி இறக்குமதி விலைகள் 13 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் ஏற்றுமதி விலைகள் 16 சதவீதத்தினால் அதிகரித்தன. விலைகளில் ஏற்பட்ட இச்சார்பு ரீதியான அசைவுகள் வர்த்தக மாற்று விகிதத்தில் 3 சதவீதமான முன்னேற்றத்தினை விளைவித்ததுடன் சுட்டெண் 1986 இன் 111 இலிருந்து 1987 இல் 114 இற்கு உயர்வடைந்தது.

அட்டவணை 1.29

**வெளிநாட்டு வர்த்தகம் 1979—1987**

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | சுட்டெண்கள் 1981=100 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலைகள் | | வர்த்தக மாற்று விகிதம் (ஆ) |
| | ஏற்றுமதிகள்* (க. ஏ. பெ.) | இறக்குமதிகள்* (கொ. கா. க.) | வர்த்தக நிலுவை | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குமதிகள் (ஆ) | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குமதிகள் (ஆ | |
| 1979 ... | 15,286 | 22,560 | — 7,275 | 89 | 94 | 82 | 68 | 121 |
| 1980 ... | 17,595 | 33,942 | — 16,347 | 95 | 111 | 92 | 86 | 107 |
| 1981 ... | 21,043 | 36,583 | — 15,540 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1982 ... | 21,454 | 41,946 | — 20,492 | 105 | 100 | 98 | 104 | 94 |
| 1983 ... | 25,096 | 45,558 | — 20,461 | 99 | 110 | 125 | 109 | 115 |
| 1984 ... | 37,347 | 47,541 | — 10,194 | 116 | 114 | 160 | 114 | 140 |
| 1985 ... | 36,207 | 54,049 | — 17,843 | 120 | 109 | 142 | 123 | 115 |
| 1986 ... | 34,072 | 54,559 | — 20,487 | 128 | 124 | 126 | 114 | 111 |
| 1987 (அ) | 41,133 | 60.517 | — 19,384 | 130 | 127 | 146 | 129 | 114 |

* 1980 ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைக்கப்பட்டவை.
(அ) தற்காலிகமானவை.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

**ஏற்றுமதிகள்**

சீராக்கப்பட்ட தரவுகளின்படி 1987 இல் ஏற்றுமதிகளின் பெறுமதி 1986 இன் ரூ. 340,720 இலட்சத்துடன் (சிஎஉ 10,360 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 411,330 இலட்சமாக (சிஎஉ 10,800 இலட்சம்) அமைந்து ரூபா நியதிகளில் 21 சதவீத அதிகரிப்பினையும் சிஎஉ நியதிகளில் 4 சதவீத அதிகரிப்பினையும் காட்டியது. 1986 இல் பதிவு செய்யப்பட்ட 6 சதவீதங் கொண்ட (சிஎஉ நியதிகளில் 21 சதவீதம்) வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றமாக இருந்தது. 1987 இன் அதிகரித்த வருவாய்களுக்கு கைத் தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களே முக்கிய காரணமாக இருந்தது. கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதி 1986இன் ரூ. 158,780 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,830 இலட்சம்) 1987 இல் ரூ. 200,040 இலட்சத்திற்கு (சிஎஉ 5,250 இலட்சம்) உயர்வடைந்தவேளையில் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பெறுமதி இரு ஆண்டுகளிலும் ரூ. 11,820 இலட்சத்திலிருந்து (சிஎஉ 360 இலட்சம்) ரூ. 17,590 இலட்சத்திற்கு (சிஎஉ 460 இலட்சம்) அதிகரித்தது.

1987 இல் இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றத்தில் மிக ஏமாற்றம் தரும் பண்பாக விளங்கியது யாதெனில், முக்கிய வேளாண்மைப் பண்டங்களின் ஏற்று மதி அளவுகளில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சியேயாகும். இதன் விளைவாக சராசரி உண்மை ஏற்றுமதி விலைகளில் முன்னேற்றமேற்பட்டிருந்த பொழுதும் உண்மை நியதிகளில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1986இன் சிஎஉ 4,790 இலட்சத்திலிருந்து 1987 இல் சிஎஉ 4,580 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. எனினும் ரூபா நியதிகளில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 157,640 இலட்சத்திலிருந்து ரூ. 174,370 இலட்சத்திற்கு 11 சதவீதத்தினுல் அதிகரித்தன.

தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1986 இன் ரூ. 92,530 இலட்சத்துடன் (சிஎஉ 2,810 இலட்சம்) ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 106,540 இலட்சமாக (சிஎஉ 2,800 இலட்சம்) விளங்கியது. இது ரூபா நியதிகளில் 15 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்ததெனினும் சிஎஉ நியதிகளில் சிறிதளவு வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இதற்கு ஏற்றுமதி அளவு 1986 இன் 2,080 இலட்சம் கிலோக்கிரும் களிலிருந்து 1987 இல் 2,010 இலட்சம் கிலோக்கிரும்களுக்கு 3 சதவீதத்தினுல் குறைவடைந்தமையே முழுக் காரணமாகும். மாருகச் சராசரி ஏற்றுமதி விலைகள் கிலோவொன்றிற்கு ரூ. 52.97 இற்கு உயர்வடைந்து ரூபா நியதிகளில் 19 சத வீதமாக முன்னேற்றமடைந்தபோதும் சிஎஉ நியதிகளில் கிலோக்கிருமொன் றிற்கு சிஎஉ 1.39 இற்கு 3 சதவீதத்தினுல் உயர்வடைந்தன.

1987 இல் விலைப்போக்குகள், செலாவணி வீத அசைவுகள் இரண்டினதும் சாதகமான தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில் கொழும்பு தேயிலை ஏலங்களில் சராசரி விலை கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 39.30 இற்கு 28 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. எனினும் இலண்டன் ஏலங்களில் இலங்கைத் தேயிலையின் சராசரி விலைகள் கிலோகிருமொன்றுக்கு 115.67 பென்சுகளிலிருந்து கிலோகிருமொன் றுக்கு 105.21 பென்சுகளுக்கு 9 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றன.

அட்டவணை 1.30

## ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு 1985 — 1987

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 (ஈ) | 1985 | 1986 | 1987 | 1985 | 1986 | 1987 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் ... | 19,026 | 15,764 | 17,437 | 689 | 479 | 458 | 52.5 | 46.3 | 42.4 |
| 1.1 தேயிலை ... | 12,003 | 9,253 | 10,654 | 435 | 281 | 280 | 33.1 | 27.2 | 25.9 |
| 1.2 இறப்பர் ... | 2,566 | 2,622 | 2,929 | 93 | 80 | 77 | 7.1 | 7.7 | 7.1 |
| 1.3 தெங்கு ... | 3,093 | 2,389 | 2,140 | 112 | 73 | 56 | 8.5 | 7.0 | 5.2 |
| 1.3.1 உள்ளீட்டுஉற்பத்திகள் ... | 2,383 | 1,609 | 1,423 | 86 | 49 | 37 | 6.6 | 4.7 | 3.4 |
| 1.3.2 ஏனையவை ... | 710 | 780 | 717 | 26 | 24 | 19 | 1.9 | 2.3 | 1.8 |
| 1.4 சிறு வேளாண்மை உற்பத்திகள் (அ) ... | 1,365 | 1,500 | 1,714 | 49 | 46 | 45 | 3.8 | 4.4 | 4.2 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஆ) ... | 14,295 | 15,878 | 20,004 | 517 | 483 | 525 | 39.5 | 46.6 | 48.6 |
| 2.1 புடவையும் ஆடைகளும் ... | 7,960 | 9,629 | 12,897 | 288 | 293 | 339 | 22.0 | 28.3 | 31.4 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் ... | 3,877 | 2,358 | 2,592 | 140 | 72 | 68 | 10.7 | 6.9 | 6.3 |
| 2.3 ஏனையவை ... | 2,458 | 3,891 | 4,515 | 89 | 118 | 118 | 6.8 | 11.4 | 10.9 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் ... | 864 | 1,182 | 1,759 | 31 | 36 | 46 | 2.4 | 3.5 | 4.3 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 561 | 755 | 1,447 | 20 | 23 | 38 | 1.6 | 2.2 | 3.5 |
| 3.2 ஏனையவை ... | 303 | 427 | 311 | 11 | 13 | 8 | 0.8 | 1.3 | 0.8 |
| 4. பகுக்கப்படாதவைகள் (இ) ... | 2,021(உ) | 1,249 | 1,933(உ) | 73 | 38 | 51 | 5.6 | 3.7 | 4.7 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 36,207 | 34,072 | 41,133 | 1,311 | 1,036 | 1,080 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள்.
(ஆ) சீராக்கப்பட்டவை.
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.
(ஈ) தற்காலிகமானவை.
(உ) வான்கலம் ஒன்றின் ஏற்றுமதி உட்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்.

மாற்றல்— 1985 — 1 சிஎஉ = ரூ. 27.63
1986 — 1 சிஎஉ = ரூ. 32.90
1987 — 1 சிஎஉ = ரூ. 38.10

1987 இல் இறப்பர் ஏற்றுமதியின் அளவு 1,060 இலட்சம் கிலோக்கிரும் களுக்கு 4 சதவீதத்தினுல் மிகக் கூடியளவிற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் சராசரி ஏற்றுமதி விலைகள் (க.ஏ.பெ.) 1 சதவீதத்தினுல் (ரூபா நியதிகளில் 16 சதவீதம்) கிலோக்கிரும் ஒன்றுக்கு சிஎஉ 0.73 இற்கு (கிலோக்கிரும் ஒன்று ரூ. 27.63) சிறிதளவால் உயர்வடைந்தது. இதன் விளைவாக சிஎஉ நியதிகளில் ஏற்றுமதி வருவாய்களில் 4 சதவீதங் கொண்ட வீழ்ச்சி காணப்பட்டதெனினும் ரூபா நியதிகளில் 12 சதவீதம் கொண்ட அதிகரிப்புக் காணப்பட்டது.

அனைத்துத் தெங்கு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1986 இன் ரூ. 23,890 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 730 இலட்சம்) 1987 இல் ரூ. 21,400 இலட்சத்திற்கு (சிஎஉ 560 இலட்சம்) மிகக் கூடுதலாக 23 சத வீதத்தினுல் (ரூபா நியதிகளில் 10 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இதற்கு 1987 இல் உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிப் பெறுமதி ரூ. 14,230 இலட் சத்திற்கு (சிஎஉ 370 இலட்சம்) 24 சதவீதத்தினுல் (ரூபாய் நியதிகளில் 12 சத வீதம்) குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமையே பெருமளவு காரணமாகும். ஏற்றுமதிகளின் அளவு ஏறத்தாள அரைப்பங்காக 1986 இன் 11,050 இலட்சம் காய்களுக்குச் சமமான அளவுகளிலிருந்து 1987 இல் 5,380 இலட்சம் காய் களுக்குச் சமனுகக் குறைவடைந்தது. 1986 இல் காயொன்றிற்கான விலை ரூ. 1.46 இலிருந்து (காயொன்றிற்கு சிஎஉ 0.044) 1987 இல் காயொன்றிற்கு ரூ. 2.64 இற்கு (காயொன்றிற்கு சிஎஉ 0.069) 57 சதவீதத்தினுல் (ரூபா நியதிகளில் 81 சதவீதம்) குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையினுல் தோன்றிய சாதகமான தாக்கத்தினுல் ஏற்றுமதியின் அளவில் ஏற்பட்ட குறைவு பெருமளவுக்கு ஈடு செய்யப்பட்டது. 1987 இல் தெங்குத்துணை உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 7,170 இலட்சத்திற்கு (சிஎஉ 190 இலட்சம்) 21 சதவீதத்தினுல் (ரூபா நியதிகளில் 8 சதவீதம் வீழ்ச்சியடைந்தன).

1987 இல் சிறு வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதி 1986 இன் ரூ. 15,000 இலட்சங்களுக்கு (சிஎஉ 460 இலட்சம்) எதிராக ரூ. 17,140 இலட்சமாக (சிஎஉ 450 இலட்சம்) விளங்கி ரூபா நியதிகளில் 14 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியதெனினும் சிஎஉ நியதிகளில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. கோப்பி, கராம்பு, ஏலக்காய் என்பனவற்றின் வருவாய்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டவேளையில் மிளகு, கறுவா, பழங்கள், முந்திரிப்பருப்பு, எள்ளு என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1986 இன் ரூ. 158,780 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,830 இலட்சம்) 1987 இல் ரூ. 200,040 இலட்சத்திற்கு (சிஎஉ 5,250 இலட்சம்) 9 சதவீதத்தினுல் (ரூபா நியதிகளில் 26 சதவீதம்) குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தன. இவ் வதிகரிப்புடன் மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 49 சதவீதத்திற்கு அதிகரித்தமையின் மூலம் 1986 இல் அடையப்பட்ட வெற்றியை மேலும் வலுப்படுத்தியது. இவ்வாண்டிலேயே அதுவரை முதன்மை இடத்தைப் பிடித்திருந்த வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதியைக் கைத் தொழில் ஏற்றுமதிகள் விஞ்சின. இவ்வதிகரிப்பு 1986 இன் ரூ. 96,290 இலட் சத்திலிருந்து (சிஎஉ 2,930 இலட்சம்) 1987 இல் ரூ. 128,970 இலட்சங்களுக்கு (சிஎஉ 3,390 இலட்சம்) 16 சதவீதத்திற்கும் (ரூபா நியதிகளில் 34 சதவீதம்) கூடுதலாக அதிகரித்த புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளின் பெறுமதி

யில் பெருமளவிற்குப் பிரதிபலிக்கப்பட்டது. ஏனைய கைத்தொழில் ஏற்றுமதி களிலிருந்தான வருவாய்கள் ரூபா நியதிகளில் ரூ. 45,150 இலட்சமாக அமைந்து 16 சதவீதங் கொண்ட முன்னேற்றத்தைக் காட்டியபோதும் சிஎஉ 1,180 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் ஏறக்குறைய அதே மட்டத்திலேயே காணப்பட்டது. இது 1986 இன் 33 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப் பிற்கு எதிரான பாதகமான ஒரு தன்மையாகும். 1987 இன் வருவாய்களில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு மீன் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், தொழில்நுட்ப, மின் கருவிகள் போன்றவற்றிலிருந்தான வருவாய்கள் குறை வடைந்தமையே பெருமளவு காரணமாகும். 1987 இல் பெற்றோலிய உற்பத்தி களின் வருவாய்கள் பெறுமதி ரூபா நியதிகளில் ரூ. 25,920 இலட்சத்திற்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் சிஎஉ நியதிகளில் அவற்றின் பெறுமதி 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1987 இல் கனிப்பொருள் ஏற்றுமதிகள் ரூ. 11,820 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 360 இலட்சம்) ரூ. 17,590 இலட்சத்திற்கு (சிஎஉ 460 இலட்சம்) உயர்வடைந்து 29 சதவீதம் (ரூபா நியதிகளில் 49 சதவீதம்) கொண்ட குறிப் பிடத்தக்க வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தன. இதற்கு இரத்தினக்கல் ஏற்றுமதி களிலிருந்தான வருவாய்கள் 1986 இன் ரூ. 7,550 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 230 இலட்சம்) 1987 இல் ரூ. 14,470 இலட்சத்திற்கு (சிஎஉ 380 இலட்சம்) 65 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 92 சதவீதம்) உயர்வடைந்தமையே முழுக் காரணமாகும். வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சி இரத்தினக்கல் ஏற்றுமதி களின் அளவு, விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன. ஏற்றுமதி அளவு 1986 இன் 49 இலட்சம் கரட்டிலிருந்து 1987 இல் 54 இலட்சம் கரட்டிற்கு 10 சதவீதத்தினால் உயர்வுற்றவேளையில் சராசரி க.ஏ.பெ. விலை இதே காலப்பகுதியில் கரட் ஒன்றிற்கு ரூ. 154 இலிருந்து ரூ. 267 இற்கு 73 சத வீதத்தினால் அதிகரித்தது. முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளாகத் தாய்லாந்து, கொங்கொங், யப்பான் என்பன விளங்கின.

**இறக்குமதிகள்**

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1986 இன் ரூ. 545,590 இலட்சத்துடன் (சிஎஉ 16,580 இலட்சம்) ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 605,170 இலட்சமாக (சிஎஉ 15,880 இலட்சம்) விளங்கியது. ரூபா நியதிகளில் 11 சதவீதங் கொண்டதொரு அதிகரிப்பு அவ தானிக்கப்பட்டபோதும் சிஎஉ நியதிகளில் 4 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்த இவ்வீழ்ச்சி பெரும்பாலும் நுகர்வுப் பொருட்கள், முதலீட்டுப்பொருட் களின் இறக்குமதியிலேயே பிரதிபலித்தது.

இறக்குமதிகளின் உள்ளமைப்பு 1987 இல் மேலும் மாற்றங்கட்குட்பட்டது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பங்கு 1986 இன் 22.5 சதவீதத்திலிருந்து 1987 இல் 22.8 சதவீதத்திற்குச் சிறிதளவால் உயர்வடைந்தவேளையில் 1985 இன் 54 சதவீதத்திலிருந்து 1986 இல் 52 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்ற இடைநிலைப் பொருட்களின் பங்கு 1987இல் 57 சதவீதத்திற்கு மிகக் கூடியளவில் அதிகரித்தது. இதற்குப் பெற்றோலிய இறக்குமதிகளின் பங்கு 11 சதவீதத்திலிருந்து 14 சத வீதத்திற்கும், புடவைகள் ஆடைகளின் இறக்குமதிப் பங்கு 11 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கும் அதிகரித்தமையே முழுக் காரணமாகும். அதேவேளை முத லீட்டுப் பொருட்களின் பங்கு 19 சதவீதமாக அமைந்து முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே காணப்பட்டது.

அட்டவணை 1.31

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் 1985 | 1986 (அ) | 1987 (ஆ) | சிஎஉ பத்து இலட்சம் 1985 | 1986 | 1987 | மொத்தத்தின் சதவீதம் 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 10,462 | 12,256 | 13,804 | 378.7 | 372.5 | 362.3 | 19.4 | 22.5 | 22.8 |
| 1.1 உணவும் குடிபானமும் ... | 5,906 | 6,746 | 7,451 | 213.8 | 205.0 | 195.6 | 10.9 | 12.4 | 12.3 |
| 1.1.1 அரிசி ... | 1,089 | 1,052 | 681 | 39.4 | 32.0 | 17.9 | 2.0 | 1.9 | 1.1 |
| 1.1.2 மா ... | 206 | 90 | 96 | 7.5 | 2.7 | 2.5 | 0.4 | 0.2 | 0.2 |
| 1.1.3 சீனி ... | 1,985 | 1,764 | 2,385 | 71.8 | 53.6 | 62.6 | 3.7 | 3.2 | 3.9 |
| 1.2 ஏனையவை ... | 4,556 | 5,510 | 6,353 | 164.9 | 167.5 | 166.7 | 8.4 | 10.1 | 10.5 |
| 2. இடைநிலைப் பொருட்கள் (உ) ... | 29,331 | 28,618 | 34,619 | 1,061.7 | 869.9 | 908.6 | 54.2 | 52.4 | 57.2 |
| 2.1 பெற்றோலியம் ... | 10,986 | 6,293 | 8,716 | 397.6 | 191.3 | 228.8 | 20.3 | 11.5 | 14.4 |
| 2.2 வளமாக்கி ... | 1,579 | 1,282 | 1,074 | 57.2 | 39.0 | 28.2 | 2.9 | 2.4 | 1.8 |
| 2.3 இரசாயனம் ... | 902 | 1,587 | 1,559 | 32.6 | 48.2 | 40.9 | 1.7 | 2.9 | 2.6 |
| 2.4 கோதுமை ... | 2,765 | 2,371 | 2,147 | 100.1 | 72.1 | 56.3 | 5.1 | 4.4 | 3.5 |
| 2.5 புடவைகளும் துணியும் (உ) ... | 3,799 | 6,353 | 8,086 | 137.5 | 193.1 | 212.2 | 7.0 | 11.5 | 13.4 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 10,387 | 10,556 | 11,332 | 376.0 | 320.9 | 297.4 | 19.2 | 19.4 | 18.7 |
| 3.1 பொறியும் கருவியும் ... | 4,769 | 5,828 | 6,639 | 172.6 | 177.1 | 174.2 | 8.8 | 10.7 | 11.0 |
| 3.2 போக்குவரத்துக் கருவி ... | 2,499(இ) | 1,457 | 1,418 | 90.5 | 44.3 | 37.2 | 4.6 | 2.7 | 2.3 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 899 | 907 | 709 | 32.5 | 27.6 | 18.6 | 1.7 | 1.7 | 1.2 |
| 4. பகுக்கப்படாதவை ... | 3,868 | 3,129 | 762 | 140.0 | 95.1 | 20.0 | 7.2 | 5.7 | 1.3 |
| மொத்த இறக்குமதிகள் (ஈ) ... | 54,049 | 54,559 | 60,517 | 1,956.4 | 1,658.4 | 1,588.3 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சுங்கச் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிராத வான்கலங்கள், கப்பல் களின் பெறுமதியை உள்ளடக்குகிறது.
(ஈ) சீராக்கப்பட்டது.
(உ) முன்னர் நுகர்வுப் பொருட்களாகப் பாகுபடுத்தப்பட்ட புடவை இறக்குமதிகள் தற்பொழுது இடை நிலைப்பொருட்களாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்,
ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா,
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

1987 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான மொத்தச் செலவு ரூ. 113,320 இலட்சமாக விளங்கி (சிஎஉ 2,970 இலட்சம்) சிஎஉ நியதிகளில் 7 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியதுடன் ரூபா நியதிகளில் முன்னைய ஆண்டின் ரூ. 105,560 இலட்சத்தினைவிட (சிஎஉ 3,210 இலட்சம்) 7 சதவீதங் கொண்ட மிதமல்லா வளர்ச்சி காணப்பட்டது. எனினும் கட்டிடப் பொருட்களின் இறக்குமதி ரூ. 7,090 இலட்சமாகவும் (சிஎஉ 190 இலட்சம்) போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதி ரூ. 14,180 இலட்சமாகவும் (சிஎஉ 370 இலட்சம்) அமைந்து முறையே 22 சதவீதத்தினாலும் (சிஎஉ நியதிகளில் 33 சத வீதம்) 3 சதவீதத்தினாலும் (சிஎஉ நியதிகளில் 16 சதவீதம்) பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை பொறித்தொகுதிக் கருவிகளின் இறக்குமதிப் பெறுமதி சிஎஉ நியதிகளில் 2 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த தெனினும் ரூபா நியதிகளில் 14 சதவீதத்தினால் அதிகரித்தது.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1986 இன் ரூ. 286,180 இலட்சத்துடன் (சிஎஉ 8,700 இலட்சம்) ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 346,190 இலட்சமாக (சிஎஉ 9,090 இலட்சம்) அமைந்து 21 சதவீதம் கொண்ட (சிஎஉ நியதிகளில் 4 சதவீதம்) அதிகரிப்பினைக் காட்டியது. எனினும் 1987 இல் வளமாக்கி, கோதுமைத் தானியம், இரசாயனம் போன்ற இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவில் குறை வடைந்தது. வளமாக்கி இறக்குமதிப் பெறுமதி 16 சதவீதமளவினால் (சிஎஉ நியதிகளில் 28 சதவீதம்) வீழ்ச்சியடைந்தவேளையில் கோதுமைத் தானியம் மற்றும் இரசாயனத்தின் இறக்குமதிப் பெறுமதிகள் முறையே 9 சதவீதத்தினாலும் (சிஎஉ நியதிகளில் 22 சதவீதம்) 2 சதவீதத்தினாலும் (சிஎஉ நியதிகளில் 15 சத வீதம்) குறைவுற்றன. எனினும் இவ்வீழ்ச்சிகள் பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதி 1986 இன் ரூ. 62,930 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,910 இலட்சம்) 1987 இல் ரூ. 87,160 இலட்சத்திற்கு (சிஎஉ 2,290 இலட்சம்) 20 சதவீதத் தினால் (ரூபா நியதிகளில் 39 சதவீதம்) அதிகரித்தமையின் மூலம் பெருமளவிற்கு எதிரீடு செய்யப்பட்டன. இது 1987 இல் மசகெண்ணெயின் இறக்குமதிகளின் சராசரி விலைகள், அளவு இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன. இறக்குமதி அளவு 1986 இன் 121 இலட்சம் பீப்பாய்களிலிருந்து 1987 இல் 131 இலட்சம் பீப்பாய்களுக்கு அதிகரித்தவேளையில் சராசரி இறக்குமதி விலை பீப்பாய் ஒன்றிற்கு சிஎஉ 13 இலிருந்து சிஎஉ 14 இற்கு உயர்வடைந்தது. இன்னொரு குறிப்பிடத்தக்கதொரு மாற்றம் என்னவெனில் புடவைகள் மற்றும் ஆடைகளின் இறக்குமதிப் பெறுமதி 1986 இன் ரூ. 63,530 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,930 இலட்சம்) 1987 இல் ரூ. 80,860 இலட்சத்திற்கு (சிஎஉ 2,120 இலட்சம்) அதிகரித்தமையேயாகும். இத்தகைய இறக்குமதிகள் பெரும்பாலும் ஆடைக் கைத்தொழிலின் தேவைகளை ஈடுசெய்வதற்காகவே இருந்தன.

நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1986 இன் ரூ. 122,560 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 138,040 இலட்சத்திற்கு ரூபாய் நியதிகளில் 13 சதவீதத்தினால் அதிகரித்ததெனினும் சிஎஉ நியதிகளில் அத்தகைய இறக்குமதிகள் சிஎஉ 3,730 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,620 இலட்சத் திற்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. சிஎஉ நியதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி வகைகள் அனைத்திலும் பிரதிபலித்தது. குறிப்பாக உணவு மற்றும் குடிபானம் என்பனவற்றின் இறக்குமதிகள் சிஎஉ 2,050 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,960 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரிசி இறக்குமதிகள் 1986 இன் சிஎஉ 320 இலட்சத்தி

அட்டவணை 1.32

முக்கிய இறக்குமதிகளின் அளவு — 1987

மெற்றிக் தொன்கள்

| மாதம் | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகு எண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|
| சனவரி ... | 10,064 | 49,183 | 11,438 | 125,752 | 49,893 |
| பெப்புருவரி ... | 10,044 | 61,690 | 18,480 | 63,283 | 19,665 |
| மாச்சு ... | — | 33,277 | 72,450 | 156,200 | 37,302 |
| எப்பிறல் ... | 19,938 | 52,423 | 59,501 | 186,077 | 28,538 |
| மே ... | 6 | 48,978 | 18,237 | 154,034 | 14,056 |
| யூன் ... | 17 | 52,500 | 9,983 | 154,016 | 6,630 |
| யூலை ... | 2,885 | 46,539 | 30,786 | 153,441 | 22,883 |
| ஓகத்து ... | 14,016 | 54,000 | 22,802 | 154,285 | 6,692 |
| செத்தெம்பர் ... | 155 | — | 34,121 | 158,303 | 29,984 |
| ஒற்றோபர் ... | 12,975 | 125,032 | 29,482 | 158,052 | 14,187 |
| நவெம்பர் ... | 12,552 | — | 201 | 158,046 | 36,242 |
| திசெம்பர் ... | 30,197 | 55,000 | 58,765 | 157,364 | 35,697 |
| மொத்தம் (அ) ... | 112,849 | 578,622 | 376,246 | 1,778,853 | 301,769 |

(அ) சீராக்கப்பட்டது,

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்
ஏனைய முக்கிய வளமாக்கிஇறக் குமதியாளர்களும்.
இலங்கை மத்திய வங்கி.

லிருந்து 1987 இல் சிஎஉ 180 இலட்சத்திலிருந்து மிகக்கூடியளவில் வீழ்ச்சியுற்றமையே பெருமளவிற்குக் காரணமாகும். எனினும் 1987 இல் இதே வகுப்பில் சீனி இறக்குமதி மீதான செலவினம் சராசரி விலை, இறக்குமதி அளவு இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக சிஎஉ 630 இலட்சத்திற்கு 17 சதவீதத்தினால் உயர்வுற்றமையையும் கவனித்தல் வேண்டும். ஏனைய நுகர்வுப்பொருட்களின் பெறுமதியும் 1986 இன் சிஎஉ 1,680 இலட்சத்திலிருந்து 1987 இல் சிஎஉ 1,670 இலட்சத்திற்கு மிகச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு மருந்தாக்கப் பொருட்கள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் என்பனவற்றின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

1977இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமாக்கப்பட்ட வர்த்தகக்கொள்கை தீர்வைகளிலும் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கைகளிலும் மேலும் செய்யப்பட்ட திருத்தங்களுடன் 1987 இலும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது.

1985 நவெம்பரில் புடவை இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டதைத், தொடர்ந்து 1987 இல் இறக்குமதித் தீர்வைகள் செயற்கைப் புடவைகளைப் பொறுத்தவரை ஒரு சதுர மீற்றருக்கு ஆகக் குறைந்த தீர்வையான ரூ. 30 உடன் கொ.கா.க. பெறுமதியில் 60 சதவீத மட்டத்திற்கும், பருத்திப் புடவைகளைப் பொறுத்தவரை ஒரு சதுர மீற்றருக்கு ரூ. 15 இற்கும் மேலும் குறைக்கப்பட்டன. முன்னர் இத்தீர்வை செயற்கைப் புடவைகளுக்கு கொ.கா.க. பெறுமதியில் 100 சதவீதம் அல்லது ஒரு சதுர மீற்றருக்கு ரூ. 40 ஆகவும் பருத்திப் புடவைகளுக்கு ஒரு சதுர மீற்றருக்கு ரூ. 25 ஆகவும் உயர்வாக இருந்தது.

எனினும் 1986 இல் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப் பட்ட கோதுமைத் தானிய இறக்குமதி மீதான தீர்வை 1987 இல் 20 சதவீதத் திற்கு மேலும் உயர்த்தப்பட்டது. இவ்வதிகரிப்புக்கள் உள்ளூர் நெல் வேளாண்மை யாளர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டுச் சனாதிபதி தீர்வை ஆணைக்குழு வினால் மேற்கொள்ளப்பட்ட எடுத்துரைப்புக்களுக்கேற்பவே விதிக்கப்பட்டன.

அத்துடன் இவ்வகை இறக்குமதிகளின் மீதான ஆகக் கூடிய இறக்குமதித் தீர்வை 60 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டவேளையில் தீர்வையின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட வளமாக்கி, நூல்கள், கருவாடு மற்றும் சில இறக்குமதி தவிர இறக்குமதி செய்யப்பட்ட மற்றைய அனைத்து விடயங்களின் மீதும் ஆகக் குறைந்தது 5 சதவீதத் தீர்வை விதிக்கப்பட்டது.

ஏற்றுமதியைப் பொறுத்தவரை அனைத்துச் சிறு வேளாண்மை உற்பத்திகள் மற்றும் கடலுற்பத்திகள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் ஒழிக்கப்பட்டன. மரபு ரீதியான ஏற்றுமதிகளைப் பொறுத்தவரை தொகை வடிவிலான தேயிலை உறை களிலடைக்கப்பட்ட தேயிலை என்பனவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வை ரூ. 1.50 இனால் முறையே கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 5.00 இலிருந்து கிலோக்கிரா மொன்றுக்கு ரூ. 3.50 இற்கும் கிலோக்கிராமொன்றுக்கு ரூ. 3.50 இலிருந்து கிலோக்கிராமொன்றுக்கு ரூ. 2.00 இற்கும் குறைக்கப்பட்டது.

சிறு வேளாண்மை உற்பத்திகள், கடலுற்பத்திகள் என்பனவற்றின் மீது ஏற்கனவே இருந்த தீர்வைகள் நீக்கப்பட்டதுடன், கடலுற்பத்திகள் மரக்கறிகள், இறைச்சி, கறுவா, முந்திரிப்பருப்புப் போன்ற பல மரபற்ற உற்பத்திகள் மீதான ஏற்றுமதி உரிமத் தேவைப்பாடுகளும் ஒழிக்கப்பட்டன.

பன்னாட்டுச் சந்தைகளில் புடவைகள் ஆடைகள், தோல் உற்பத்திகள் மீதான பாதுகாப்புக் கொள்கைகள் ஐ.அ. நாடுகள், கனடா, ஐரோப்பிய சந்தைகளில் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தன. இலங்கையின் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் ஐ.அ. நாடுகள், ஐரோப்பிய பொருளாதார சமூகம், கனடா, நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளினால் தொழிற்படுத்தப்பட்ட அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருந்த ஆடை ஏற்றுமதிகளுக்கே இப் பாதுகாப்புக் கொள்கைகள் பொருந்துவனவாக இருந்தன.

பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை 1987 ஒற்றோபரில் முடி வடைந்தது. ஜெனீவாவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் புதிய உடன் படிக்கையொன்றைக் கைச்சாத்திடுவதற்கு உற்பத்தி நாடுகளும் நுகர்வு நாடுகளும் உடன்பட்டன.

**உள்நாட்டு வர்த்தகம்**

1977 இன் வர்த்தகத் தாராளமாக்கலுடன் உள்நாட்டு வர்த்தகக்கொள்கை, வர்த்தக நடவடிக்கைகளில் சந்தை விசைகளுக்குப் பெரும் பங்கு வழங்குவதனையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. இக்குறிக்கோளைப் பேணும் விதத்தில் போட்டியினைப் பாதுகாக்கவும் வர்த்தகத் தனியுரிமை உருவாக்குவதைத் தடுக்கும் பொருட்டும் அரச தலையீடு ஆகக் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டது. அரச வர்த்தக முயற்சிகளின் தொழிற்பாட்டு அளவு குறைக்கப்பட்டதன் வாயிலாக மொத்த, சில்லறை வர்த்தகத்திலும் ஏனைய நடவடிக்கைகளிலும் பெருமளவிற் குத் தனியார் துறையினர் பங்கேற்பது ஊக்குவிக்கப்பட்டது.

தேசிய விலைகள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக 1987 ஓகத்து 1 ஆம் நாள் நியாய வர்த்தக ஆணைக்குழு நிறுவப்பட்டது. இப்புதிய ஆணைக்குழு தேசிய விலைக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப் பாக விளங்குவதுடன் தனியுரிமைகள், இணைப்புக்கள், போட்டிக்கெதிரான வழி முறைகள் போன்றவற்றைக் கையாளுவதற்கான அதிகாரங்களையும் கொண்டுள் ளது. முன்னைய ஆண்டின் 56 விலை மீளாய்வுகளுக்கு எதிராக ஆணைக்குழு இவ்வாண்டில் மொத்தமாக 52 மீளாய்வுகளை மேற்கொண்டது. அத்துடன் பால் மாவின் பகிர்ந்தளிப்பு, அலுமினிய மென்தகட்டின் வழங்கல் என்பன தொடர் பாகக் கிடைத்த முறைப்பாடுகளையும் ஆணைக்குழு பரிசீலனை செய்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே ''மகாபொல வர்த்தக சந்தை'' மற்றும் நுகர்வோர் அமைப்புக்களை ஒழுங்கு செய்வதன்மூலம் நுகர்வோரின் அறிவாற்றலை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. 1987 இல் 4,484 புதிய நுகர்வோர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டவேளையில் 14 மகாபொல வர்த்தகச் சந்தைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்தப்பட்டன.

அரசதுறை வர்த்தக அமைப்புக்கள் தனியார்துறையுடன் கூடியளவிற்குப் போட்டியிடவும் புதிய வர்த்தகச் சூழலில் வியாபார ஆற்றல்மிக்கதாக மாறுவதன் பொருட்டும் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் பன்முகப் படுத்தின. நாட்டின் சில பகுதிகளிலுள்ள பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இன்றியமையாத பண்டங்களின் தாங்கிருப்புக்களைப் பேணுவதன்மூலம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பொது மக்களுக்கு உணவு மற்றும் ஏனைய இன்றியமையாத பண்டங்களை வழங்குவதில் மிக முக்கிய பங்கினை வகித்தது.

உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு வர்த்தகத்தில் கூட்டுறவு நிலையங்களின் பங்கு அரிசி, மா, சீனி மற்றும் நுகர்வுப் பொருட்கள் போன்ற அடிப்படை உணவு விடயங்களின் பகிர்ந்தளிப்பிற்கே முக்கியமாக மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. எனினும் நெருக்கடிக் காலத்தில் அல்லது உள்நாட்டுக் குழப்பத்தின் போது இன்றியமையாத பண்டங்களின் பகிர்ந்தளிப்பு தடைப்பட்ட காலப் பகுதியில் கூட்டுறவு நிலையங்களின் முக்கியத்துவம் தெளிவாக உணரப்பட்டது.

**சுற்றுலா**

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தொடர்ந்து இடம்பெறும் உள்நாட்டுக் குழப்பங்கள் சுற்றுலாக் கைத்தொழிலில் எதிர்பார்க்கப்பட்ட மீள் எழுச்சியைத் தடை செய்தன. இதன் விளைவாக 1987 இன் சுற்றுலா வருகைகள் 1978 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியுற்றன.

1987 இல் சுற்றுலா வருகைகள் 182,620 ஆக அமைந்து முன்னைய ஆண்டில் வருகைதந்த 230,106 இனைவிட 21 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இது மிக உயர்ந்த சுற்றுலா வருகை மட்டமான 407,230 இனைப் பதிவு செய்த 1982 உடன் ஒப்பிடுகையில் 55 சதவீதம் குறைவானதாகும். இதன்படி 1983 ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுக் குழப்பங்களினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டதொரு கைத்தொழிலாகச் சுற்றுலாக் கைத்தொழில் விளங்கியது.

அட்டவணை 1.33

**சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1986 – 1987**

| விடயம் | 1986 | 1985 இனைவிட % மாற்றம் | 1987 | 1986 இனைவிட % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ... | 230,106 | — 10.6 | 182,620 | — 20.6 |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் ... | 6,266 | — 36.6 | 2,417 | — 61.4 |
| 3. பயணி இரவுகள் ('000) ... | 2,437 | 3.0 | 2,414 | — 0.9 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூபா பத்து இலட்சங்களில் ... | 2,159.9 | — 7.6 | 1,900.0(அ | — 12.0 |
| 4.2 ஐ.அ. டொலர் பத்து இலட்சம் ... | 77.1 | + 4.2 | 64.5 | — 16.3 |
| 4.3 சி.எ.உ. பத்து இலட்சம் ... | 65.6 | — 9.6 | 49.9 | — 24.0 |
| 5. நோக்கங்களின்படியான வரவுகளின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் ... | 216,148 | — 7.6 | 162,782 | — 24.7 |
| 5.2 வியாபாரம் ... | 10,084 | — 44.6 | 14,276 | + 41.6 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா ... | 143,022 | — 6.5 | 121,112 | — 15.3 |
| 6.2 ஆசியா ... | 66,150 | — 16.3 | 43,462 | — 34.3 |
| 6.3 வட அமெரிக்கா ... | 9,232 | — 10.9 | 7,166 | — 22.4 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 53,479 | — 2.0 | 53,300 | — 0.3 |
| 7.1 நேரடியாக ... | 22,280 | — 2.0 | 22,200 | — 0.4 |
| 7.2 மறைமுகமாக ... | 31,199 | — 1.9 | 31,100 | — 0.3 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை சுற்றுலாச் சபை..

சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, வருகைகளில் 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்த கிழக்கு ஐரோப்பா தவிர்ந்த அனைத்து முக்கிய சுற்றுலா வருகைப் பிரதேசங்களிலும் பரந்து காணப்பட்டது. மேற்கு ஐரோப்பா தொடர்ந்தும் முக்கிய சந்தையாக இருந்து மொத்தச் சுற்றுலா வருகைகளில் 66 சதவீதத்திற்கு வகை கூறியபோதும் இது 1986 இன் 143,022 வருகையிலிருந்து 1987 இல் 121,112 இற்குக் குறைவடைந்து 15 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தலைமன்னார் படகுப் பணித்துறை மூடப்பட்டமை, இலங்கையிலிருந்து திரும்பும் இந்திய மக்களுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற இறக்குமதிப் படிகள் தொடர்பாசக் கடுமையான ஒழுங்குவிதிகள் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டமை என்பவற்றின்

காரணமாக இந்தியாவிலிருந்தான வருகைகள் 54 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றன. இதன் விளைவாக இரண்டாவது பெரும் சந்தையான ஆசியாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் 1987 இல் 34 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. வட அமெரிக்கா, அவுத்திரலாசியா போன்ற ஏனைய முக்கிய பிரதேசங்களிலிருந்தான வருகைகள் முறையே 22 சதவீதத்தினுலும், 23 சதவீதத்தினுலும் வீழ்ச்சியுற்றன.

இலங்கைச் சுற்றுலாச் சபையினுல் மதிப்பிடப்பட்ட 1987 இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 19,000 இலட்சமாக அமைந்து (சிஎஉ. 500 இலட்சம்) சிஎஉ. நியதிகளில் 24 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. 1982 இல் கிடைத்த மிக உயர்ந்த மட்டச் செலாவணி வருகையான சிஎஉ 1,330 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1987 இன் வருவாய்கள் 62 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன.

1987 இல் சுற்றுலா வருகைகள் தொடர்ந்து மேலும் வீழ்ச்சியுற்றமையின் காரணமாகச் சுற்றுலாக் கைத்தொழிலில் இருந்தான தொழில் வாய்ப்புக்களும் 1987 ஆம் ஆண்டுப் பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியுற்றன. எனினும் இரண்டு புதிய சுற்றுலா விடுதிகளில் ஒன்று கொழும்பிலும் மற்றையது கண்டியிலும் திறக்கப்பட்டதன் காரணமாக இத்துறையில் தொழிலிலிருந்தோரின் மொத்த எண்ணிக்கை 1986 இன் 53,479 இலிருந்து 1987 இல் 53,300 இற்கு மிகச் சிறிதளவால் மட்டும் வீழ்ச்சியுற்றதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1987 இல் இத்துறையிலிருந்த மொத்தத் தொழிலாளரில் ஏறத்தாள 22,200 பேர் நேரடியாக இக்கைத்தொழிலில் இருந்தவேளையில் ஏறத்தாள 31,100 பேர் துணைத்துறையில் தொழிலாற்றினர்.

1987 இல் தரப்படுத்தப்பட்ட 128 சுற்றுலா விடுதிகள் 9,921 அறை வசதியுடன் தொழிற்பட்டன. இது 1986 இல் தொழிற்பட்ட 131 தரப்படுத்தப்பட்ட சுற்றுலா விடுதிகளுடன் ஒப்பிடுகையில் 2 சதவீதம் குறைவானதாகும். துணைத் தங்குமிடத்துறையில் அலகுகளின் எண்ணிக்கை 1986 இன் 106 இலிருந்து 1987 இல் 104 இற்கு வீழ்ச்சியடைந்து மொத்த அறைகளின் எண்ணிக்கையை 1,187 இலிருந்து 1,172 இற்குக் குறைத்தன. சுற்றுலா விடுதிகளின் இயலளவுப் பயன்பாடு விரும்பத்தக்க மட்டத்திற்கு மிகக் கீழேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. தரப்படுத்தப்பட்ட சுற்றுலா விடுதிகளில் சராசரி அறையில் தங்கும் வீதம் 1986 இன் 32.9 சதவீதத்திலிருந்து 1987 இல் 31.5 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

முன்னைய ஆண்டினைப்போன்றே வடக்கிலும் கிழக்குக் கரையோரத்திலுமுள்ள சுற்றுலா விடுதிகள் பயன்படுத்தப்படாமலேயே இருந்தன. பண்டைய நகரப் பகுதியில் மிகக் குறைந்த தங்கல் வீதங்கள் காணப்பட்டவேளையில் கொழும்பு நகரம், கொழும்பு பெரும்பாகம், தென்கரையோரப் பகுதிகள் மிதமான தங்கல் வீதங்களைக் கொண்டிருந்தன.

1983 இன் பிற்பகுதியிலிருந்தும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு அரசினுல் வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகள் 1987 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் தொழிற்பட்டன. இவ்வழிமுறைகளில் சில கடன்களின் 100 சதவீதமான மீள் அட்டவணைப்படுத்தலுடன் 1989 மாச்சு வரை நீடிக்கப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கான சட்டரீதியான கால அவகாசத்தையும் பாதிக்கப்பட்ட சுற்றுலா விடுதிகளின் தொழிற்படு மூலதனத் தேவைகளை ஈடுசெய்வதற்கான வட்டியற்ற கடன் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.